**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No.280/2024 |
| Deposition of witness for Prosecution | : | P.W-1 |
| Name | : | மந்திரலட்சுமி, வயது 36 |
| Father Name/Husband Name | : | முருகன் |
| Village | : | கோவில்பட்டி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | செவிலியர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 09th day of April 2025.

**(எதிரிகள் ஆஜர் இல்லை கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

<u>**முதல் விசாரணை**</u>

1. நான் தற்போது கோவில்பட்டியில் வசித்து தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் செவிலியராக பணியில் உள்ளேன். 1வது எதிரி எனது கணவர். 2வது எதிரி 1வது எதிரியின் இரண்டாவது மனைவி. 3வது எதிரி எனது மாமனார். 4வது எதிரி எனது மாமியார். 5வது எதிரி எனது நாத்தனார். 6 வது எதிரி 5வது எதிரியின் கணவர். 7 வது எதிரி எனது கணவரின் அண்ணன், 8 வது எதிரி 7 வது எதிரியின் மனைவி, 9வது எதிரி மற்றும் 10 வது எதிரிகள் 2வது எதிரியின் பெற்றோர்கள்.
2. 03.06.2011 ஆம் தேதி கோவில்பட்டி, தாமரை மகாலில் வைத்து எனக்கும் 1வது எதிரிக்கும் இருவீட்டார் சம்மதத்துடன் திருமணம் நடைபெற்றது. 1வது எதிரி வெளிநாட்டில் எலக்ட்ரீசியன் வேலை செய்து வந்தார். திருமணத்திற்கு பின்னர் கடலூர் புதுச்சத்திரம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒப்பந்த பணியாளராக நான் வேலை செய்து கொண்டிருந்தேன்.
3. திருமணத்திற்கு பின்னர் நானும் எனது கணவரும் புதுச்சத்திரம் சென்று வசித்து வந்தோம். ஒரு மாதம் கழித்து 1வது எதிரி மீண்டும் வெளிநாடு போய்விட்டார். சில மாதங்கள் இருந்துவிட்டு மீண்டும் புதுச்சத்திரத்திற்கு வந்து வேலை செய்து கொண்டிருந்தார்.
4. அப்போதே எங்கள் இருவருக்கும் பிரச்சனைகள் இருந்து வந்தது. அப்போது 1வது எதிரி என்னை வெறும்பய மகள் என்றும் பணக்கார

வீட்டில் இருந்து பெண் கொடுக்க வந்தார்கள் என்றும் உன்னை திருமணம் செய்து கொண்டேன் என்றும் 1வது எதிரியின் அம்மா, அப்பா என்னை மன உளைச்சலுக்கு ஆளாக்கினார்கள்.

5. என்னிடம் குறைகள் கண்டுபிடித்து சண்டை செய்து வந்தார்கள். பின்னர் நான் கருவுற்றிருந்ததால் மகப்பேறு விடுப்பில் கோவில்பட்டிக்கு வந்துவிட்டேன். கோவில்பட்டி லதா மருத்துவமனையில் 23.09.2012 ஆம் தேதி எனக்கு பிரசவம் நடபெற்றது.
6. பிரசவம் பார்க்கும் போது லதா மருத்துவமனைக்கு வந்து சென்ற போது அங்கு செவிலியராக பணி செய்த முத்துலட்சுமி என்ற லட்சுமி என்ற சுதா என்பவருக்கும் 1வது எதிரிக்கும் பழக்கம் ஏற்பட்டது. மீண்டும் நான் புதுச்சத்திரத்திற்கே சென்றுவிட்டேன். அங்கு 1வது எதிரி சரிவர வராமல் இருந்தார். எப்போதாவது வந்து செல்வார்.
7. முத்துலட்சுமியுடன் இருந்த பழக்கத்தை நான் கண்டித்தேன். 2014 ஆம் ஆண்டு 1வது எதிரி கோவில்பட்டிக்கு வந்து விவகாரத்து மனு தாக்கல் செய்தார். அதற்கு பதில் மனுவாக நான் சேர்ந்து வாழ வேண்டி பதில் கொடுத்தேன். வழக்கு நடந்த போது 2015 ஆம் ஆண்டு 1வது எதிரி சேர்ந்து வாழ்வதாக கூறி மேற்படி விவரகாரத்து மனுவை வாபஸ் பெற்றார்.
8. 10.05.2015 ஆம் தேதி என் கணவர் வீடு உள்ள இ.பி காலனியில் வைத்து என் கணவர் அவரது பெற்றோர்கள், சத்யா, அழகுசுப்பு, வாணி, பெருமாள், கற்பகம், முருகன் ஆகியோர்கள் முன்னிலையில் விளக்கு முன்னர் வைத்து என் கணவரும் 2வது எதிரியும் தாலி கட்டி திருமணம் செய்து கொண்டார்கள் என்று எங்கள் தெருவில் உள்ள சிங்கராணி என்பவர் ஜவுளி வியாபாரம் செய்பவர் மூலமும் 1வது எதிரியின் அண்ணன் பாலகுருசாமியின் மனைவி ரேவதி என்பவர் மூலமும் தெரியவந்தது.
9. சேர்ந்து வாழ்வதாக சொல்லி விவகாரத்து மனுவை வாபஸ் பெற்று விட்டு அதன் பின்னர் எந்த தகவலும் இல்லாததால் 24.08.2017 ஆம் தேதி கோவில்பட்டி அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் என் கணவரை காணவில்லை என்று புகார் கொடுத்தேன். 1வது எதிரியின் அண்ணன்கள் அழகுசுப்பு, பாலகுருசாமி மற்றும் 1வது எதிரியின் அப்பா ஆகியோர்கள் 1வது எதிரி வெளிநாட்டில் இருப்பதாகவும் எப்போது வருவாரோ அப்போது சேர்த்து வைப்பதாக எழுதி கொடுத்துவிட்டு சென்றனர்.
10. எனக்கு சந்தேகம் இருந்ததால் மீண்டும் நான் மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனு கொடுத்தேன். அந்த மனுவிலும் 1வது எதிரி ஆஜர் ஆகவில்லை. 2017 ஆம் ஆண்டு 1வது எதிரி மீண்டும் ஒரு விவகாரத்து மனு தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனு தற்போதும் நிலுவையில் உள்ளது. 1வது எதிரி இரண்டாவது திருமணம் முடிந்து அவர்களுக்கு குழந்தை இருப்பதை ஊர்ஜிதம் செய்ய என் அண்ணன் மேட்டுப்பாளையத்தில் விஜயக்குமார் மூலம் மீண்டும் விசாரணை செய்தோம்.

11. எனது நாத்தனார் கோவையில் நரசிம்மநாயக்கம்பாளையத்தில் வசித்து வருகிறார். அவர் வீட்டின் பக்கத்தில் 1 வது மற்றும் 2 வது எதிரிகள் 2015 ஆம் ஆண்டு முதல் குமரன் நகர், பாலாஜி நகர் மற்றும் பாம்பே நகர் ஆகிய இடங்களில் வசித்து வந்துள்ளனர். அவர்களுக்கு பெண் குழந்தை உள்ளது. குழந்தையின் பெயர் மிருதுளா. அந்த குழந்தை ஜி.கே.டி பள்ளியில் படிக்கிறது.
12. அதன் பின்னர் 06.02.2024 ஆம் தேதி மீண்டும் கோவில்பட்டி அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். 11.06.2024 ஆம் தேதி நீதிமன்றம் மூலம் உத்தரவு பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் புகார்மனு நான் கொடுத்தது தான். **அந்த புகார்மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.